

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளினை சிறப்பிக்கும் வகையில், அண்ணா மிதிவண்டி போட்டிகளை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி கொடிஅசைத்து துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ஜெ.யு. சந்திரகலா, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் ஞானசேகரன், நகர செயலாளர் பி.பூங்காவனம், நகரமன்ற உறுப்பினர்கள் எஸ்.வினோத், ஏர்டெல்குமார், கோபிகிருஷ்ணன் ஜீவமணி, சங்கர், துளசி,முத்து சுரேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### இல.பத்மநாபன் - எஸ்.வி.செந்தில்குமார் முன்னிலை

# ரூ. 5.90 கோடி மதிப்பீட்டில் தாராபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் கட்டும் பணி!

### அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் - துவக்கி வைத்தனர்!

*திருப்பூர், ஜன.5-*

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு ரூ 5.90 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டும் பணியினை திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், தாராபுரம் ஒன்றியக்குழு பெருந்தலைவர் எஸ்.வி.செந்தில்குமார் முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என். கயல்விழி செல்வராஜ் ஆகியோர் துவக்கி வைத்தனர்!

தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 19.12.2024 அன்று திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இருந்து காணொளிகாட்சி வாயிலாக தாராபுரம் ஒன்றியம், நாஞ்சியம்பாளையம் ஊராட்சி, தாராபுரம் அரசு தொழிற்பயிற்சி நிலையம் எதிரில் தாராபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் ஒதுக்கப்பட்ட வருவாய் திட்டத்தின் கீழ் ரூ 5.90 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டிவைத்தார்கள். அதனைத் தொடர்ந்து 02.01.2025 வியாழக்கிழமை அன்று தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஃபெலிக்ஸ்ராஜா தலைமையில், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், தாராபுரம் ஒன்றியக்குழு பெருந்தலைவர் எஸ்.வி.செந்தில்குமார் முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் புதிய கட்டடம் கட்டும் பணியினை துவக்கி வைத்தனர்.

தாராபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் 17,020 சதுர அடி பரப்பளவில் கட்டப்படவுள்ளது. இரண்டு தளங்களை கொண்ட இக் கட்டடம் ஒன்றியக்குழு பெருந்தலைவர் அறை, ஆணையாளர், வட்டார வளர்ச்சி அலுவலர் அறை, ஒன்றியக்குழு கூட்ட அரங்கு, அலுவலக அரங்கு, தணிக்க அலுவலர் அறை, கணிணி அறை, பதிவேடுகள் அறை, இருப்பறை, கழிப்பறை வளாகமும், வட்டார வளர்ச்சி அலுவலர் அறை, பொறியியல் பிரிவு, பயிற்சிக் கூட்டரங்கு, அலுவலக அரங்கு, மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அறை, கணினி அறை, கழிப்பறை வளாகம் ஆகிய வசதிகளுடன் கட்டப்படவுள்ளது. இந்நிகழ்ச்சியில் பிரபாவதி பெரியசாமி, கே.எஸ்.தனசேகர், எஸ். முருகானந்தம், கு.பாப்புக் கண்ணன், மாவட்ட மகளிர் அணி சரஸ்வதி ராஜேந்திரன், க. செல்வராஜ், கருணாகரன், சிவக்குமார், சன் பாலு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.




திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. தனது சொந்த செலவில் சிறப்பான பயிற்றுனர்களை கொண்டு இந்த பயிற்சி வகுப்பு இலவசமாக நடத்தப்படுகின்றது. பயிற்சி வகுப்பு துவக்கவிழாவிற்கு திருப்பத்தூர் நகர செயலாளர் சு.ராசேந்திரன் தலைமை தாங்கினார். க.சையத்அலீம் வரவேற்பு வழங்கி, ஒன்றிய கழக செயலாளர்கள் K.A.குணசேகரன், K.முருகேசன், K.S.A.மோகன்ராஜ், சேர்மென்கள் சங்கீதாவெங்கடேஷ், விஜயாஅருணாசலம், திருமதிதிருமுருகன் ஆகியோர் முன்னிலையில் தூயநெஞ்சக்கல்லூரி முதல்வர் அருட்தந்தை D.மரியஆண்டனிராஜ், தமிழ்செம்மல்.Dr.இரத்னநடராஜன், குட்வில் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி பொருளாளர். R.M.சிவானந்தம், செயலாளர். இராமானுஜம் ஆகியோர் துவக்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார்கள். இறுதியில் சி.வெங்கடேசன் நன்றியுரையாற்றி தொகுதி மாணவ மாணவியர் நலனுக்காக பாடும்படும் சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுக்கு இளைஞர்களும், பெற்றோர்களும், கல்வியாளர்களும் பாராட்டுதலுடன், நன்றி தெரிவித்தனர்.

### தாம்பரம் - கடற்கரை இடையே இன்று ரயில்கள் நிறுத்தம்!

# கூடுதல் பேருந்துகள் இயக்க போக்குவரத்துத் துறை நடவடிக்கை!

*சென்னை, ஜன. 5 -*

தாம்பரம் கடற்கரை இடையே இன்று (5.1.2025) காலை 7 முதல் மாலை 4 வரை மின்சார ரெயில் சேவை ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும், அதனால், கூடுதலாக 40 பேருந்துகள் இயக்கப்படும் எனவும் சென்னை மாநகர் போக்குரவத்துக் கழகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சென்னை மாநகர் போக்குரவத்துக் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு ள்ளதாவது:

05.01.2025 அன்று தாம்பரம் ரயில் நிலையத்தில் New Foot Over Bridge பணிகள் நடைபெற இருப்பதால் காலை 07.00 மணி முதல் மாலை 16.00 மணி வரை கடற்கரையிலிருந்து தாம்பரத்திற்கு இயக்கப்படும் ரெயில்கள் பல்லாவரம் வரையும், அதேபோல் செங்கல்பட்டிலிருந்து சென்னை கடற்கரை செல்லும் ரெயில்கள் காலை 11.00 மணி முதல் மாலை 16.00 வரை செங்கல்பட்டிலிருந்து கூடுவாஞ்சேரி வரையும் ரெயில்கள் இயக்கப்படும் என தென்னக ரெயில்வே அறிவித்துள்ளது.

எனவே, அவ்வழித்தடத்தில் பயணம் செய்யும் பயணிகள் நலன் கருதி மா.போ.கழகம் 05.01.2025 அன்று தற்போது இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக பல்லாவரம் பேருந்து நிலையத்திலிருந்து செங்கல்பட்டுக்கு 10 பேருந்துகளையும், பல்லாவரம் பேருந்து நிலையத்திலிருந்து கூடுவாஞ்சேரிக்கு 10 பேருந்துகளையும், தாம்பரம் பேருந்து நிலையத்திலிருந்து தி.நகர் மற்றும் பிராட்வேக்கு கூடுதலாக 20 பேருந்துகள் என மொத்தம் 40 பேருந்துகளை மா.போ.கழகம் இயக்க உள்ளது.

மேற்குறிப்பிட்ட நாட்களில் முக்கிய பேருந்து நிலையங்களில் அலுவலர்களை நியமித்து இப்பேருந்துகள் இயக்கத்தினை கண்காணிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு குறிப்பிடப் பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நத்தம் அ. இராசாமணி
### சனவரி 5 (2016)



**திராவிடர் கழகத்தில் தனது 14வது வயதில் சேர்ந்து, அதன்பின்னர் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், தளபதி மு.க.ஸ்டாலின் ஆகியோருடன் பழகும் வாய்ப்பைப் பெற்று நத்தம் ஒன்றியக் கழகத் துணைச் செயலாளராகப் பணியாற்றியவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி உயர்வுப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### அய்யன் திருவள்ளுவரின் பேரறிவுச்சிலை (Statue of wisdom)

# காந்தசக்தியாக உலகமக்களின் கவனத்தை ஈர்க்கும்!

**2000ம்** ஆவது ஆண்டு ஜனவரி திங்கள் முதல் நாள் குமரி முனையில் உலகப் பொதுமறையாம் திருக்குறளின் 133 அதிகாரங்களைக் குறித்திடும், மகத்தான அய்யன் திருவள்ளுவர் சிலையினை முத்தமிழறிஞர் கலைஞரின் ஆலோசனைகளின் அடிப்படையில், கணபதிசபதியால் வடிவமைக்கப் பட்ட தமிழர்களின் தலைசிறந்த, தொன்மையான பண்பாட்டின் வெளிப்பாடாக அய்யன் திருவள்ளுவரின் உருவச்சிலை நிறுவப்பட்டது. சிலை நிறுவி 25 ஆண்டு காலத்திற்குப் பின்னர், வெள்ளி விழா நிகழ்ச்சியாக 2024 டிசம்பர் திங்கள் 30, 31ஆம் தேதிகளிலும், 2025ம் ஆண்டு முதல் தேதிகளிலும் விழாநடைபெறுவதற்கான ஏற்பாடுகளை தமிழ்நாட்டின் முதல்வரால் திட்டமிடப்பட்டு, உலக நாடுகளில் வாழுகின்ற தமிழர்கள் அனைவரும் தென்குமரி முனையில் அமைந்துள்ள அய்யன் திருவள்ளுவர் சிலை நோக்கி திரும்பும் அளவிற்கு இந்த வெள்ளி விழா நிகழ்ச்சி ஒட்டுமொத்த தமிழினத்தின் தொன்மையான பண்பாட்டை வெளிப்படுத்தும் நிகழ்ச்சியாகவே நடைபெற்றது.

கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26ல் உருவான ஆழிப்பேரலையை எதிர்கொண்டு காலச்சூறாவளியிலும் கடல்கோளிலும் அய்யன் திருவள்ளுவரின் சிலை மட்டுமல்ல; வாழ்வியல் நெறிகளும் அணுவளவும் அசைத்திடாது என்பதை உலகிற்கு மெய்ப்பித்து காட்டும் முறையில் உயர்ந்து நிற்கும் அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு “பேரறிவுச் சிலை” (Wisdom statue) என திராவிட மாடல் ஆட்சியின் தீர்க்கதரிசி முதல்வர் பெயர் சூட்டியுள்ளார்.

அமெரிக்காவில்தான் மனித சுதந்திரமும், நாட்டின் சுதந்திரமும் மகிழ்ச்சிகரமான சமூக வாழ்விற்கு அடிப்படையானது என்ற சிந்தனையை வெளிப்படுத்தும் சுதந்திரச் சிலையாக (Liberty statue) அமைக்கப் பட்டுள்ளது. அத்தகைய மனித சுதந்திர சிந்தனைக்கு அடிப்படையான “பேரறிவுச் சிலையாக” (Wisdom statue) அய்யன் திருவள்ளுவர் சிலைக்குப் பெயர் சூட்டியிருப்பதென்பது புதிய வரலாற்றுப் பதிவாகும். மனித வாழ்க்கையின் அனைத்து அடிப்படை அம்சங்களையும், நெறிப்படுத்திய மகத்தான அறிவுப் பேராசான் அய்யன் திருவள்ளுவர், உலகப் பேறறிஞர்கள் பாராட்டும் உயர்ந்த வாழ்க்கை நெறிக்கான கருத்துக்களை உள்ளடக்கிய கருவூலமாக திருக்குறளை மனித குலத்திற்கு வழங்கினார்.




**பொன்.முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்
கழக உயர்நிலை
செயல் திட்டக்குழு உறுப்பினர்

அந்த கருத்துக் கருவூலத்தை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வார்ப்பித்து வழங்கிய அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு “பேரறிவுச் சிலை” (Wisdom statue) எனப் பெயரிட்டு, அய்யன் திருவள்ளுவர் பேரறிவுச்சிலை மூலமாக தமிழினத்தின் பண்பாட்டையும், தொன்மையான நாகரிகத்தையும், வாழ்க்கை நெறிகளையும் எடுத்து விளக்கியிருப்பது வியத்தகுசாதனை மட்டுமல்ல, அது அழிக்கவியலாத வரலாற்றுப் பதிவுமாகும்! அய்யன் திருவள்ளுவரின் “பேரறிவுச் சிலை” (Wisdom statue) என்பது உலக சமுகத்திற்கு, உயர்ந்த வாழ்க்கை நெறிகளுக்கு வழிகாட்டும் ஓர் நிரந்தரக் கலங்கரை விளக்கமாகும். அதுமட்டுமல்ல, திருவள்ளுவரின் வாழ்க்கை நெறி என்பது சாதி, மத, நிற, இன வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு ஒட்டுமொத்த மனித குலத்திற்கும், உயர்ந்த வாழ்க்கை நெறிகளுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கம்தான்!

இந்த நிகழ்வினையெட்டி 37 கோடி ரூபாய் செலவில் அய்யன் திருவள்ளுவர் சிலையை விவேகானந்தர் பாறையுடன் இணைக்கும் கண்ணாடி இழைப் பாலம் கட்டி முடிக்கப்பட்டு, முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அய்யன் திருவள்ளுவர் சிலை நிர்மாணிக்கப்பட்டு 25 ஆண்டுகளைக் குறிக்கும் வெள்ளிவிழா என்றாலும், நடைமுறையில் ஐம்பெரும் விழாவாக கொண்டாடிக் கொண்டிருக்கிறோம் என அந்த நிகழ்ச்சிகளை முதல்வர் பட்டியலிடுகிறார்.

- அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா.
- அய்யன் திருவள்ளுவர் சிலையையும், விவேகானந்தர் பாறையையும் இணைக்கின்ற கண்ணாடி இழைப்பாலம் திறப்பு விழா.
- வெள்ளி விழா மலர் வெளியீடு
- திருக்குறள் கண்காட்சி தொடக்கம்.
- அய்யன் திருவள்ளுவர் தோரணவாயில் அடிக்கல் நாட்டுதல் விழா.

இந்த ஐம்பெருவிழாவின் மூலம் அய்யன் திருவள்ளுவர் சிலையையும், விவேகானந்தர் பாறையையும் இணைக்கும் கண்ணாடி இழைப் பாலம் மூலம் சுற்றுலாப் பயணிகள் கடல் இடைவெளி கடந்து கண்டுகளிக்கும் ஏற்பாடாக கன்னியாகுமரி முனையிலிருந்து சுற்றுலாப் பயணிகள் கடல் பகுதியைக் கடப்பதற்கு ஏதுவாக, மூன்று படகுகள் வாங்கப்பட்டு, அந்தப் படகுகளுக்கு கன்னியாகுமரியின் வரலாற்றோடும், திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்போடும் தொடர்புடைய, பெருந்தலைவர் காமராஜர், மார்சல் நேசமணி, ஜி.யு. போப் ஆகியவர்களின்



பெயர் சூட்டப்படும் என்று முதல்வரின் அறிவிப்பு தமிழ் மக்கள் மனம் திறந்து மகிழ்ச்சியுடன் பாராட்டக் கூடிய அறிவிப்புகளாகும்.

இந்த அறிவிப்புகளைத் தொடர்ந்து “திருக்குறள் திருப்பணிகள்” என்ற தலைப்பில் மாவட்டம்தோறும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுமென்ற அறிவிப்புடன், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூபாய் மூன்று இலட்சம் ஒதுக்கப்படும் என அறிவித்துள்ளார்கள்.

மேலும், 133 உயர்கல்வி நிறுவனங்களில் திருக்குறள் தொடர்பான கலை இலக்கியப் போட்டிகள், கருத்தரங்குகள் நடத்தப்படும். ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் கடைசி வாரம் “திருக்குறள் வாரம்” கொண்டாடப்படும். தமிழ்த் திறனறி தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான திருக்குறள் மாணவர் மாநாடு ஆண்டுதோறும் நடத்தப்படும். திருக்குறளும் அதன் உரையும் அரசு அலுவலகங்களில் எழுதியிருப்பது போல் தனியார் நிறுவனங்களிலும் எழுதிவைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என முதல்வர் அவர்கள் அறிவித்ததன் மூலம், திருக்குறள் கருத்துகள் வகுப்பறையிலிருந்து, மக்கள் மன்றத்திற்கு கொண்டு வந்திருப்பதோடு, இந்தச் செயல்பாடுகள் மூலம் திருக்குறள் கருத்துக்கள், விழாக்கால நிகழ்ச்சி களாக இல்லாமல், சமூக வாழ்க்கையின் ஓர் அங்கமாக ஒவ்வொரு நாளும், ஒலித்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்பதற்கான பொருத்தமான அடிப்படைக் கட்டமைப்புகளை தொலைநோக்குச் சிந்தனையுடன் உருவாக்கித் தந்திருக்கின்ற, ஆம்! திராவிட மாடல் ஆட்சிக்குப் பெருமை சேர்த்திருக்கிற தமிழ்நாடு முதல்வரை தமிழ்கூறும் நல்உலகம் என்றும் மறவாது.

குமரிமுனையென்பது வரலாற்றில் முக்கடல் சந்திக்குமிடம், அதுமட்டுமல்ல கடல்கோள்களால் உள்வாங்கிக் கொண்ட குமரிக்கண்டம் என்ற “லெமூரியா” கண்டமும் இங்கிருந்துதான் தொடங்குகிறது என வரலாற்று அகழ்வாய்வாளர்கள் கருதுகிறார்கள். அத்தகைய வரலாற்றின் தொடக்க நிலப்பகுதியான குமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலையை நிறுவிய பெருமையும், அந்த வரலாற்று நிகழ்வு காலமெல்லாம் தொடரும் நிறுவனச் செயல்பாடாக மாற்றிய பெருமையும், புகழும் முத்தமிழறிஞர் கலைஞரையும், தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களையும் சாரும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

காவேரியில் கட்டப்பட்ட கல்லணை கரிகாலப் பெருவளத்தான் என்ற சோழமன்னனின் பெருமை கூறும், தஞ்சைப் பெரிய கோவில் ராஜராஜ சோழன் பெருமைகூறும், கடல் கடந்த வெற்றிகள் கண்டவன் என்ற பெருமை ராஜேந்திர சோழனையே சாரும். இந்த நூற்றாண்டில் திருவள்ளுவருக்குப் குன்றாப் புகழும், பெருமையும் சேர்த்த முத்தமிழறிஞர் கலைஞரையும், தமிழக முதல்வரையும் உலக நாடுகள் முழுவதும் பரவி வாழும் தமிழர்கள் நிச்சயம் மறக்க மாட்டார்கள். ஆம்! பாராட்டிக்கொண்டேதான் இருப்பார்கள்.

இவ்வளவு சிறப்புகளையும், தாங்கிநிற்கும் கன்னியாகுமரிக்கு இனி மக்கள் கூட்டம் எண்ணிலடங்காமல் வரக்கூடும் எனக் கணித்த முதல்வர் அவர்கள் கன்னியாகுமரிப் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றி, அதற்கான கட்டமைப்புகளை உருவாக்கிட அரசு இயந்திரத்தை முடுக்கிவிட்டுள்ளார். இனி உலகம் முழுமையும் பரவி வாழும் தமிழ் மக்கள், மதம், சாதி, நிறம் ஆகிய வேறுபாடுகளற்ற சமூக அமைப்பை உருவாக்க 2000 ஆண்டுகளுக்கு முன்னரே சிந்தித்த அய்யன் திருவள்ளுவர் சிலையைக் காண உலகம்தழுவிய மக்கள்கூட்டம் வற்றாத ஜீவநதியாய் வந்து கொண்டுதான் இருக்கும்.

ஆம்! அவர்கள் அய்யன் திருவள்ளுவரை,

வணங்குவார்கள் மகிழ்ச்சியுடனும் உங்களை வாழ்த்துவார்கள்.